# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com



மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைசெல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடகச் செய்தி எண்.15/2017 நாள்.15-04-2017

பெறுநர்

அனைத்து ஊடகங்கள்
சென்னை

அன்புடையீர், வணக்கம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் வெளியிடும் ஊடகச் செய்தி :-

**ஏப்ரல் 25 முதல் அரசு ஊழியர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம் : திருச்சியில் போராட்ட ஆயத்த மாநாடு**

*2017 ஜனவரி 6 முதல் 8 வரை நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 12ஆம் மாநில மாநாட்டில்*

- ★ புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சனை வழங்கிட வேண்டும்.
- ★ 8வது ஊதிய மாற்றக் குழுவை உடனே அமைத்து ஊதிய மாற்றம் செய்திட வேண்டும்.
- ★ 1.1.2016 முதல் 20 சதவீதம் இடைக்கால நிவாரணம் வழங்கிட வேண்டும்.
- ★ சிறப்பு காலமுறை ஊதியத்தை ஒழித்து வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்கிட வேண்டும்.
- ★ தொகுப்பூதியம், மதிப்பூதியம், தினக்கூலி, அவுட்சோர்சிங் முறையிலான பணி நியமனங்களை ரத்து செய்து, காலியாகவுள்ள பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் பணியமர்த்திட வேண்டும்.
- ★ சாலைப் பணியாளர்களின் 41 மாத பணிக்காலத்தை பணிக்காலமாக அறிவிக்க வேண்டும்

*ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி ஏப்ரல் 25 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் அரசு ஊழியர்கள் ஈடுபட உள்ளனர்.*

*அதன் ஒரு பகுதியாக 15.04.2017 அன்று திருச்சியில் மாலை 4.00 மணியளவில் தென்னூர், உழவர் சந்தை மைதானத்தில் மாநில அளவில் போராட்ட ஆயத்த மாநாடு நடைபெற்றது.*

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

மாநில வேலை நிறுத்த ஆயத்த மாநாட்டிற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சஙகத்தின் மாநிலத் தலைவர் மற்றும் தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஊழியர் சங்கங்களின் போராட்டக்குழு மாநில அமைப்பாளருமான திரு. மு.சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். மாநிலச் செயலாளர் இரா.பன்னீர்செல்வம் வரவேற்புரையாற்றினார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. மு.அன்பரசு வேலை நிறுத்தத் தீர்மான விளக்க உரையாற்றினார். கோரிக்கைகளை விளக்கி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் என். குமாரவேல், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநிலத் தலைவர் கு.குமரேசன். தமிழ்நாடு ஊரகவளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் திரு. பெ. கிருஷ்ணசாமி, தமிழ்நாடு வணிகவரிப் பணியாளர் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் திரு. சு.ஜெயராஜராஜேஸ்வரன், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் திருமதி கி. ஆண்டாள், தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் திருமதி டி. டெய்சி உரையாற்றினர்.

தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில பொதுச்செயலாளர் திரு.செ. பாலச்சந்தர் வாழ்த்துரை வழங்கினார். நிறைவாக, இந்திய தொழிற்சங்க மையத்தின் தமிழ்நாடு துணைப்பொதுச்செயலாளர் திரு. இர.கருமலையான் சிறப்புரையாற்றினார். மாநிலப் பொருளாளர் திரு. எம். தங்கராஜ் நன்றி கூறினார். இந்த வேலை நிறுத்த ஆயத்த மாநாட்டில் தமிழகம் முழுவதுமிருந்து பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் பங்கேற்றனர்.

**(மு.அன்பரசு)**
பொதுச் செயலாளர்.

இணைப்பு : வேலை நிறுத்த அறிவிக்கைக் கடிதம்